**RLTOP No. 4 /2022**

**ம.சா.1 – ஹரிஷ்குமார்**

நாள் :11.08.2026 நேரம் :12.35 AM

**எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை**

1.சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். மனு சங்கதிகள் அனைத்தும் என் தாயார் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனவே அதன் விரங்கள் அனைத்தும் என் தாயாருக்கு தெரியும் என்றால் சரிதான். ஆனால் எனக்கும் தெரியும். பழைய வழக்கு HRCOP 1/2009 என எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் அதன் விபரங்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என் தாயாருக்கு தான் தெரியும். மனு சொத்து சம்பந்தமாக நேரடியாக நான் சம்மந்தப்படவில்லை என்றால் சரிதான். மொத்த சொத்திற்கு தரைத்தளத்தில் 4 கடைகட்டிடங்களும், மாடிக்கு செல்லக்கூடிய படிக்கட்டும், முதல்தளத்தில் மொத்த ஒரே அறையாகவும் 2ம் தளத்தில் 6 அறைகள் உள்ளது என்றால் சரிதான். மொத்த சொத்தும் முன்பு யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் நாராயணன் செட்டியாருக்கு பாத்தியப்பட்டது. நாராயணன் செட்டியாரின் மனைவி பெயர் வேலம்மாள் என்றால் சரிதான். அவர்களுக்கு மொத்தம் 5 ஆண் வாரிசு என்றால் சரிதான். அவர்கள் பெயர் சுப்ரமணியன், சுபாஷ், சந்திரன், லோகநாதன், குணசேகரன் என்றால் சரிதான்.

2.நாராயணன் செட்டியார் மேற்படி சொத்து பொறுத்து 1989–ல் உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்து மொத்த கட்டிடத்தில் முதல் மாடிக்கு மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நாராயணன் செட்டியார் உயிலின் படி முதல் மாடியானது அவரது மனைவி வேலம்மாள் அடைய வேண்டும் என எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. மொத்த சொத்தின் நான்கு மால் தெரியுமா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கீழ் தளத்தில் உள்ள நான்கு கடைக்கட்டித்தின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியும். அவை டோர் நம்பர் 3/54, 3/54D, 3/54E, 3/54F ஆகும். மனுச்சொத்தின் கதவு எண் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. 2வது மாடியில் உள்ள அறைகளின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. மனுச்சொத்தை யாரிடமிருந்து யார் கிரையம் பெற்றார் என்றால் குணசேகரனிடமிருந்து என் தந்தை கிரையம் பெற்றார். என்னுடைய தந்தை நாராயணன் செட்டியார் மனைவி வேலம்மாளிடம் மனுச்சொத்தை கிரையம் பெற்றுள்ளாரா என்றால் இல்லை. வேலம்மாளின் மகன் குணசேகரனிடம் கிரையம் பெற்றுள்ளார். என் தந்தை கிரையம் பெற்ற சமயத்தில் வேலம்மாள் உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் சுபாஷ் மற்றும் லோகநாதன் சேர்ந்து குணசேகரன் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் கண்டு எழுதிக்கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது என்றும் மேற்படி பொது அதிகார ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4.பொது அதிகார ஆவணம் என் கைவசம் உள்ளதா என்றால் இல்லை. என் தந்தை கிரையம் பெற்றது நாராயணன் செட்டியாரின் 3 மகன்களிடமிருந்து மட்டும் தான் என்றால் சரிதான். என் தந்தை கிரையம் பெற்ற ஆவணத்தில் கண்டுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எந்தெந்த கதவு எண் கொண்ட சொத்துக்களை அவர் கிரையம் பெற்றார் என்ற விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். 3/54, 3/54B, 3/54D, 3/54E, 3/54F ஆகிய சொத்துக்களை கிரையம் பெற்றார். என் தந்தை கிரையம் பெ்ற்ற சொத்திற்கு மேற்கு மாலில் சொல்லியுள்ள சுபாஷ் என்ற நபர் நாராயண செட்டியாரின் மகன் என்றால் சரிதான். 3/54B, 3/54C ஆகிய சொத்துக்கள் சுபாஷ்க்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்தின் முதல்தளத்தில் உள்ள பகுதியை சுபாஷ் வேறு நபருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். தாவா சொத்தின் முதல் தளத்தில் ஒரு பகுதி சுபாஷிடம் கிரையம் பெற்ற நபருக்கு பாத்தியபட்டதா என்றால் தெரியாது. என் தந்தை வாங்கிய சொத்தின் கிழமேல்அளவு, தென்வடல் அளவு பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

5.என் தந்தை கிரையம் வாங்கிய சொத்தின் 2வது அயிட்ட சொத்து எது என்று தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் கதவு எண் தெரியுமா

என்றால் தெரியாது. அதை என் தந்தை கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரையபத்திரத்தில் முதல் தளம் இருப்பதாக எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தந்தையோ, தாயாரோ கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லும் 3 நபர்களுக்கு தாவா முதல் தளம் பாத்தியப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நாராயணன் செட்டியார் உயில் சாசனம் எழுதிவைத்ததன் படி தாவா சொத்து அவரது மனைவிக்கு பாத்தியப்பட்டது என்றும், அவரது மனைவியிடம் கிரையம் பெறாமல் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6.நாராயணன் செட்டியாரும், எதிர்மனுதாரும் ஏற்படுத்திக்கொண்ட கிரையம் ஒப்பந்தத்தின் விபரம் நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. அப்போது எனக்கு வயது 13 இருக்கும். எனது அப்பாவும், எதிர்மனுதாரும் ஏற்படுத்திக்கொண்ட கிரைய ஒப்பந்தத்தின் போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். மேற்படி கிரைய ஒப்பந்தம் 2012 ல் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. அது வாய்மொழியாக ஏற்படுத்தப்பட்டது. 2012 ல் எனக்கு வயது 14 என்றால் சரிதான். இன்றைய தேதிவரை தாவாசொத்து சம்மந்தமாக எழுத்து சம்மந்தமாக வாடகை ஒப்பந்தம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட RCOP 1/2009 வழக்கு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கை தவிர எதிர்மனுதாரரை காலிசெய்ய என் தந்தையோ, தாயாரோ வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அதன் வழக்கு எண் சொல்ல முடியுமா என்றால் தெரியாது.

7.மேற்படி வாடகை எந்த வருடத்தில் இருந்து பாக்கி இருக்கிறது என்றால் 2011 ம் வருடத்திலிருந்து இன்று வரை வாடகை செலுத்தவில்லை. 2011 ல் என் தந்தையும், தாயரும் கிரையம் பெற்றதிலிருந்து வாடகை கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தந்தையோ, தாயாரோ உரிமையாளர்கள் இல்லை

என்பதால் தான் நாங்கள் எதிர்மனுதாரரிடம் வாடகை கேட்கவில்லை என்றாலும், அவரும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல.

எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

விசாரணை முடிவுற்ற நேரம் : 01 .15 PM

ஒப்பம்/–
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பரமக்குடி.